தேதி – 16.07.2025.

அசல் வழக்கு எண்.148/2010

வா.சா.2 – திரு. சந்திரன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 27 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. 28ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். 7, 13 முதல் 15 பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்படுகிறது. 28ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 1ம் வாதியின் கணவர். 1ம் வாதி நல்ல உடல்நிலையில் உள்ளார் என்றால் அது சரியல்ல. அவர் படுத்தபடுக்கையாக உள்ளார். நான் சீனியர் பெயிலிப்பாக பணியாற்றி 2013-ல் ஓய்வு பெற்றுள்ளேன். எனக்கும் 1ம் வாதிக்கும் 10.04.1983 ல் திருமணம் நடைபெற்றது. தாவா சொத்துக்கள் ஆதியில் ஆறுமுகம்பிள்ளைக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்று சொன்னால் அது சரிதான். மேற்படி ஆறுமுகம்பிள்ளை 12.10.2006 ல் இறந்துவிட்டார். 1, 2 வாதிகளும், 1 முதல் 3, பிரதிவாதிகளும், சின்னப்பிள்ளை என்ற நாகரத்தினம் என்பரும் ஆறுமுகம்பிள்ளையின் மக்கள் ஆவார். ஆறுமுகம்பிள்ளை உயிருடன் இருக்கும்வரை இந்த வழக்கு தாக்கல் செய்யவில்லை. (1999 ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாக சாட்சி கூறுகிறார்). அதற்கு 2010 ல் தான் வழக்கு தாக்கல் செய்தோம். பேசி முடித்து கொள்ளலாம் என்பதால் அறிவிப்பு அனுப்பியவுடனே வழக்கு தாக்கல் செய்யவில்லை. 28ம் பிரதிவாதியை வழக்கு தாக்கல் செய்யும்போது அவரை தரப்பினராக சேர்க்கவில்லை. அதற்குபின்னிட்டு IA.281/2021 dt. 14.09.2022 ம் தேதி தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார். 28ம் பிரதிவாதியை பொருத்து இந்த வழக்கு காலவாதிதோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. மொத்த 8 இலக்க சொத்துக்கள் குறித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 28ம் பிரதிவாதியை பொருத்தவரை 3வது இலக்க சொத்தும், 8வது இலக்க சொத்தும் பிரச்சனைக்குரியதாகும். 28ம் பிரதிவாதிக்கு, 1 முதல் 5 வாதிகளும், 3, 5, 6, 7, 8, 9 பிரதிவாதிகளும் சேர்ந்து 23.12.2016-ல் தாவா 3வது இலக்க சொத்தைப் பொருத்து கிரையம் எழுதிகொடுத்துவிட்டனர் என்று சொன்னால் அவர்கள் பாகத்திற்கு

எழுதிகொடுத்துவிட்டனர். அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.31 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. 3 வது இலக்க சொத்தைப் பொருத்து ஏன் நீக்கவில்லை என்று கேட்டால் 7 ம் பிரதிவாதி அது சம்பந்தமாக வில்லங்கம் செய்துள்ளார். அதனால் நீக்கவில்லை. 8 வது இலக்க சொத்தை ஆறுமுகம்பிள்ளை 1 முதல் 3 பிரதிவாதிகளுடன் சேர்ந்து 28 ம் பிரதிவாதிக்கு 13.02.1998 ல் கிரையம் எழுதி கொடுத்துவிட்டார் என்று சொன்னால் அதுபற்றி தற்போது தான் தெரியவந்தது. அது சம்பந்தமாக IA.281/2021 மனு செய்வதற்கு 3 மாதத்திற்கு முன்பு தான் தெரியவந்தது. 8 வது இலக்க சொத்து சம்பந்தமாக 28 ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ள கிரையப்பத்திரங்கள் பி.வா.சா.ஆ.32, 33 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.32, 33 ஆவணங்கள் எழுதி கொடுத்த தேதியில் வாதிகளுக்கு தாவா சொத்தில் உரிமை இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. வாரிசு உரிமை திருத்த சட்டம் வருவதற்கு முன் ஆறுமுகம்பிள்ளையே எழுதி கொடுத்துவிட்டார் என்று சொன்னால் அதுபற்றி எங்களுக்கு தெரியாது. நான் தான் 28 ம் பிரதிவாதிக்கு பேசி கிரையம் முடித்துவிட்டேன் என்று சொன்னால் அது சரியல்ல. பி.வா.சா.ஆ.34 ஆவணத்தில் ஆவணத்தை தயாரித்தவர் என்ற இடத்தில் என்னுடைய கையெழுத்து உள்ளது என்று சொன்னால் அது சரியல்ல .(1ம் பிரதிவாதியால் அது உற்பத்தி செய்யப்பட்டது என சாட்சி கூறுகிறார்). என் தகப்பனார் பெயர் நல்லமுத்துபிள்ளை. என் பூர்வீக ஊர் கவுண்டன்பட்டி, பள்ளபட்டி அஞ்சல், நிலக்கோட்டை தாலுகா. பி.வா.சா.ஆ.34-ஐ நான் தான் தயாரித்தேன் என்றும், அதனை தயாரித்தவர் என்ற இடத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றும், அதனை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா 3, 8 இலக்க சொத்தைப் பொருத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் அது சரியல்ல.

Sd/- சந்திரன்

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/- G.Muthukumaran,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.